# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1987 ஆண்டின் 45 ஆம் இலக்க, பிரசாவுரிமை (திருத்தம்) சட்டம்

---

*[1987, நவம்பர் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

1987, நவம்பர் மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45

தபாற் செலவு : சதம் 75

[1987 நவம்பர் 25 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 38/87
1890

**பிரசாவுரிமைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, பிரசாவுரிமை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. பிரசாவுரிமைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 349 ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலம் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் :—

"(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 20 ஆம் பிரிவின்கீழ் அல்லது 21 ஆம் பிரிவின்கீழ் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிகின்ற ஆளெவரும், அவர் வேறேதேனும் நாட்டின் பிரசையொருவராக இருக்கின்றார் என்பதுடன் தொடர்ந்தும் இருக்கின்றார் என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அதன்பின் ஏதேனும் நேரத்தில் அத்தகைய ஆள், இலங்கைப் பிரசையொருவரின் அந்தஸ்தை மீண்டும் ஏற்றுள்ளார் என்ற வெளிப்படுத்துகை ஒன்றுக்கென அமைச்சருக்கு விண்ணப்பம் செய்யலாம் ; அத்துடன் அமைச்சரானவர், அத்தகைய வெளிப்படுத்துகையைச் செய்தல், விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் இலங்கைக்கு நன்மையானதாயிருக்கும் எனத் திருப்தியுற்றால், எந்த வெளிப்படுத்துகைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்த வெளிப்படுத்துகையைச் செய்யலாம்.

(3) இலங்கைப் பிரசை எவரும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 20 ஆம் பிரிவின்கீழ் அல்லது 21 ஆம் பிரிவின்கீழ் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிவதற்கு முன்னர் ஏதேனும் நேரத்தில், அவர் வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்படவேண்டிய தேதியிலிருந்தும் அதன்பின்னரும் வேறு ஏதேனும் நாட்டின் பிரசையொருவராக இருக்கின்றார் என்பதுடன் தொடர்ந்தும் இருக்கின்றார் என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்படவேண்டிய அத்தேதியிலிருந்தும் தேதியின் பின்னரும் அத்தகைய ஆள் இலங்கைப் பிரசையொருவரின் அந்தஸ்தைக் கைக்கொண்டிருக்கின்றார் என்ற வெளிப்படுத்துகையொன்றுக்காக அமைச்சருக்கு விண்ணப்பம் செய்யலாம் ; அத்துடன் அமைச்சரானவர், அத்தகைய வெளிப்படுத்துகையைச் செய்தல், விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் இலங்கைக்கு நன்மையானதாயிருக்கும் எனத் திருப்தியுற்றால், எந்த வெளிப்படுத்துகைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்த வெளிப்படுத்துகையைச் செய்யலாம்.

- ஏ 099141 - 2,810 (87/09)

(4) எவரேனும் ஆள் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்று செய்யப்பட்டவிடத்து, அவ்வாள், வேறு ஏதேனும் நாட்டினதும் பிரசையாக இருக்கின்றார் என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து, விடயத்துக்கேற்ப, மீண்டும் இலங்கைப் பிரசையொருவரின் அந்தஸ்தைப் பெறலாம் அல்லது தொடர்ந்து வைத்திருக்கலாம்.

(5) எவரேனும் ஆள் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்று வலுவிலிருக்கும்வரை, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அவ்வாள் வேறு எந்த நாட்டின் பிரசையொருவராக இருக்கின்றாரோ அந்த வேறு ஏதேனும் நாட்டின் பிரசாவுரிமையைத் துறக்குமாறு அவ்வாளைத் தேவைப்படுத்துவனவாக வாசிக்கப்படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

(6) பிரிவு 23, பிரிவு 24 என்பவற்றின் ஏற்பாடுகள், எந்த ஆள் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆளெவருக்கும் ஏற்புடையனவாதலாகாது.

(7) அமைச்சரானவர், எந்த ஆள் தொடர்பில் அத்தகைய வெளிப்படுத்துகை செய்யப்பட்டதோ, அந்த ஆள் இலங்கைப் பிரசையொருவராகத் தொடர்ந்திருப்பதன் மூலம் இலங்கைக்கு நன்மை ஏற்படமுடியாதவகையில் நடந்துகொண்டார் எனத் திருப்தியுற்றால், ஏதேனும் நேரத்தில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையை ஒழிக்கலாம்.".

(3) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஓரக்குறிப்பை இடுவதன் மூலம் :—

"பிரசாவுரிமையைத் துறத்தலும் இரட்டைப் பிரசாவுரிமை தொடர்பிலான சிறப்பேற்பாடுகளும்.".